www.padippakam.com

# வெளிச்சங்களே! உங்களுக்கு மரணமில்லை...!

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றைப் பொறுத்தவரை யூலை மாதம் 25ம், 27ம் திகதிகள் துயர் நிறைந்த, கொடுமைமிக்க, துன்பியல் நாட்களாகும்! ஆம்; அந்த இரு நாட்களில் தான் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள்; எமது தோழர்களை அடிமை விலங்குடன் பூட்டி வைத்து; சிறீலங்கா ஆட்சியாளர் சிங்களக்காடையரின் துணையோடு; திட்டமிட்டு படுகொலை செய்தனர்! இப்படுகொலையில் உயிர்நீத்த தமிழ் பேசும் மக்களிற்கும்! அடிமை விலங்கை உடைக்க புறப்பட்ட வீர மறவர்களுக்கும்! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பிரான்ஸ் கிளை தனது ஈராண்டு நினைவாஞ்சலியைச் செலுத்துகின்றது!

சோவியத் நாட்டு வரலாற்றிற்கு ஓர் இரத்த ஞாயிறு போல்; இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றிற்கு ஒரு ஜாலியன் வாலாபாக் படுகொலை போல்; தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிற்கென்றும் ஒரு வெலிக்கடைச் சிறைச்சம்பவம்; எமது தோழர்களின் இரத்தத்தினாலும், உயிரினாலும் வரலாற்றில் எழுதப்பட்டு விட்டது! தமிழீழ விடுதலைக்காக தங்களது உற்றார், பெற்றார், சொந்த பந்தங்கள், ஆசை, அபிலாசைகள், அனைத்தையும் துறந்து தாய்நாட்டின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, உயிர் பிரியும் இறுதிநேரம் வரையில் தாங்கள் கொண்ட இலட்சியத்திலிருந்து, இம்மியும் விலகாமல் இறுதிவரை தமிழீழத்திலே கடைசி தமிழன் உள்ள வரை நினைவு கூரத்தக்கவர்கள்! தமிழீழ விடுதலைக்காகப் போராடிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களில் தலை கீழாகக் கட்டி, தொங்கவிடப்பட்டு, மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப்பட்ட போதிலும், உயிர் பிரியும் விதத்தில் நையப்புடைக்கப்பட்ட வேளையிலும், அவர்களின் நெஞ்சுறுதியும், தாங்கள் கொண்ட இலட்சியத்தின் பால் அவர்களிற்கிருந்த மன உறுதியும், எம்மை யெல்லாம் வியக்க வைக்கின்றது!

எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கவே; சிங்கள இனவாதிகளினாலும், அவர்களின் முதலாளித்துவ ஆட்சியாளர்களாலும், அவர்களின் கையாட்களான ஆயுதப் படையினராலும், சமூக விரோதிகளினாலும், இவ்வினப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது என்பதை அகில உலகமே அறியும்! எமது மக்களை அழிப்பதன் மூலம்; எமது விடுதலைப் போராட்டத்தை அடக்கி விடலாம்; என்று எண்ணிய சிங்கள இனவாத அரசு இன்று தோல்வியையே தழுவி நிற்கின்றது! சிங்கள இனவாத அரசின் கெடுபிடிகளினால் கிளர்ந்தெழுந்த தமிழீழ மக்கள்; இன்று எமது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் இணைந்து, மக்களோடு ஒன்றித்த ஒரு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகின்றனர்! இன்று தமிழீழப் பிராந்தியங்களிலே பரந்துபட்ட மக்கள் அமைப்பாகப் பரிணமிக்கும் எமது கழகம் மக்களோடு ஒன்றித்த பெரியளவிலான ஆயுதப் போராட்டத்திற்குத் தயாராகி வருகின்றது! மாறாக, J.R. ஜெயவர்த்தனாவின் சிங்கள இனவாத தரகு முதலாளித்துவ அரசு, எம்மைப் பற்றியும், எமது விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பொய்ப்பிரச்சாரங்களில் ஈடுபடுவதுடன்; தொடர்ந்தும் இன ஒழிப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றது! தமிழ் பேசும் மக்களிற்கு எதிராக இத்தகைய இன ஒழிப்பை மேலும் மேற்கொள்ளுவதற்கு தம்மை பலப்படுத்துமுகமாக உலகப்புகழ் பெற்ற பயங்கரவாதிகளான அமெரிக்காவுடனும், இஸ்ரேலுடனும் உறவுகளை வளர்த்து வருகின்றது!

நவீன ஆயுதத் தளபாடங்களை வரவழைத்து, எமது விடுதலைப் போராளிகளை அழிக்கும் போர்வையில்; அப்பாவி மக்களைக் கொன்று குவிக்க; S.A.S கூலிப் படையினரையும், உளவுப்படையினரான C.I.A, மொசாட் ஆகியவற்றின் ஆலோசனையுடன் பல்வேறு தந்திரங்களையும், சிறீலங்கா அரசு எமக்கெதிராக கைக்கொண்டு வருகின்றது என்பதை அகில உலகமே அறியும்! எனினும் எமது தமிழீழ மக்களின் ஆயுதமேந்திய பரந்துபட்ட மக்கள் போராட்டத்திற்கு; சிறீலங்கா இனவாத, தரகுமுதலாளித்துவ அரசின் கூலிப்படைகள் தாக்குப் பிடிக்காது புறமுதுகிட்டு ஓடுவார்கள் என்பதில் எவ்வித ஐயமில்லை! வெலிக்கடைச்சிறைச்சாலையில் உயிர்நீத்த வீர மறவர்களின் உடலை விட்டு, உயிர் பிரியும் வரை சிங்கள காடையர்களையும், சிறைச்சாலை அதிகாரிகளையும் எதிர்த்துப் போராடியே உயிர் நீத்திருக்கின்றார்கள்! யாரும் கோழைகளைப் போல் அஞ்சி அடிபணிந்து உயிர் துறக்கவில்லை என்கின்ற செய்தி எம்மை யெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கின்றது! வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொடூரமாக படுகொலை

படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்ட ஒவ்வொரு வீரமறவர்களும் மிக மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்ட பின்னரே உயிர் துறந்திருக்கின்றார்கள்! இவர்களுடைய உயிரற்ற உடல்களைக் கூட பார்க்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்கவில்லையே! அரக்கத்தன மிக்க சிறீலங்கா அரசு; பெற்ற தாய், தந்தையருக்குக் கூடக் காட்டாது; அந்த தியாகச் செம்மல்களின் உடல்களை; இரவோடு, இரவாகத் தீயிட்டுப் பொசுக்கி விட்டது!

எங்கள் மண்ணில் வசந்தத்தை வரவழைப்பதற்காக எங்கள் தோழர்கள்; இருளில் புதைக்கப்பட்டார்கள்! ஆனாலும் அலைக்கரங்கள் ஆர்ப்பரிக்க ஆயிரம் கோடி சூரியர்களாய் அவர்கள் உதயமாவார்கள்! வெளிச்சங்களான அவர்களுக்கு என்றுமே மரணமில்லை! ஆம்! தமிழீழம் உள்ள வரை! எங்களது தோழர்களின் தியாகங்கள் என்றும் நினைவு கூரப்படும்!

உயிரிழந்த எமது தோழர்களுக்காக நாம் பழிவாங்கச் சபதம் எடுக்கப்போவதில்லை அவர்களது உயிர்கள் விலை மதிப்பற்றவை! இந்தக் கொலைகாரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தாற் கூட அதற்கு ஈடாகாது! தங்களது நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களின் உயிருக்கு இரத்தம் சிந்துவதன் மூலம் மரியாதை செலுத்திவிட முடியாது! அவர்கள் நேசித்த மக்களின் மகிழ்ச்சியே; அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்க முடியும்!

— தோழர் பிடல் காஸ்ரோ —

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
(பிரான்சுக் கிளை)

PEOPLE'S LIBERATION ORGANIZOTION
OF THAMILEELAM (FRANCE BRANCH)